அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் :124/2017
தேதி : 28/10/2017

# மத்திய அரசு பொது விநியோகத் திட்டத்தை முடக்க நினைப்பதை தமிழக அரசு அனுமதிக்க கூடாது.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் சர்க்கரையின் விலையை 13.50 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக தமிழக அரசு வரும் நவம்பர் முதல் தேதியிலிருந்து அதிகரித்துள்ளது.

மத்திய அரசு சர்க்கரை மீதான மானியத்தைக் குறைத்ததே இந்த விலை அதிகரிப்பின் காரணம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

அந்தியோதயா அன்னயோஜனா திட்டத்தின்கீழ் வரும் குடும்ப அட்டைகளைத் தவிர பிற அனைத்து அட்டைகளுக்கும் இந்த விலை அதிகரிப்பு பொருந்தும்.

இதனால் ஒரு குடும்பத்திற்கு பெரிதாக ஒன்றும் மாதச்செலவு கூடப்போதில்லை என்று வாதத்திற்காக சொல்லப்படலாம். ஆனால் மத்திய அரசு படிப்படியாக ஒவ்வொரு உணவுப்பொருளுக்கும் மானியத்தைக் குறைத்துக்கொண்டே வருமானால், மாநிலத்திலும் அதற்கேற்றவகையில் விலைகளை அதிகரிக்க நேரிடாதா என்ற ஐயம் எழுகிறது. சமீப காலங்களில்,மத்திய அரசின் போக்கைப் பார்த்தால், பொது விநியோகத் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தும் முடிவுக்கு வந்துவிட்டதாகவே தெரிகிறது. இதற்கு தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



ஏழை, எளிய, நடுத்தர மக்களை வெளிச்சந்தை விலைகளால் ஏற்படும் நிதிச்சுமைகளிலிருந்து, பொது விநியோகத் திட்டம் தான் ஓரளவு காத்துவருகிறது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மக்களுக்கும் ஏழை, எளிய, மக்களுக்கும் குறைந்த பட்ச உணவு உத்தரவாதத்தை பொது விநியோகத் திட்டம் தான் வழங்கிவருகிறது என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

எனவே தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் சர்க்கரை விலையை திரும்பப்பெற வேண்டும் என்று தமிழக அரசையும், மத்திய அரசு லெவி முறையின் கீழ் வழங்கப்படும் சர்க்கரை அளவை அதிகரிப்பதோடு, மானியத்தை குறைக்கக்கூடாது என்று மத்திய அரசையும் சமக சார்பில் வலியுறுத்துகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்



**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com